


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ ஏப்ரல். 28, 2022 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 203 ❖ ரூ.10

### அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டவர் தான் ஆளுநர்

# திட்டவட்டம்

## பேரறிவாளன் விவகாரத்தில் ஆளுநரின் பதில் ஒவ்வொரு முறையும் முரணாகவே உள்ளது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது

டெல்லி, ஏப். 28:

அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டவர் தான் ஆளுநர் என உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.





பேரறிவாளன் விடுதலை தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று நீதிபதிகள் நாகேஸ்வர ராவ், பி.ஆர்.கவாய் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆளுநர் முடிவு எடுப்பது தொடர்பாகவும், ஆளுநரிடம் கோப்புகள் தேங்கி நிற்பது தொடர்பாகவும், பல்வேறு கருத்துகளை உச்சநீதிமன்ற நீதிபகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் மிக விரைவாக ஆளுநர் முடிவை எடுக்க வேண்டும் என கடந்த முறை உச்சநீதிமன்றம் தெரிவித்திருந்த நிலையில், அதன் மீதான பதில் என்னவானது என மத்திய அரசுக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த மத்திய அரசு தரப்பு, இவ்விவகாரத்தில் குடியரசுத் தலைவருக்கு ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவரே இறுதி முடிவெடுக்க வேண்டும். ஆளுநர் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை குடியரசுத் தலைவரால் அறிவிக்க முடியும். அரசியல் சாசன விதி 72ன் கீழ் இந்த முடிவை செய்ததாக மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு தமிழக அரசு தரப்பில் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனிடையே, குறுக்கிட்ட நீதிபதிகள் பேரறிவாளனை ஏன் உடனடியாக விடுதலை செய்யக்கூடாது? இந்த விவகாரத்தில் சுமார் 27 ஆண்டுகளுக்கு மேலாக பேரறிவாளன் சிறையில் இருந்து வருகிறார். யார் இந்த விவகாரத்தில் முடிவெடுக்க வேண்டும் என்ற பிரச்சினையில் பேரறிவாளன் ஏன் சிக்க வேண்டும்? அவருக்கு ஏன் இவ்வளவு சிக்கல் ஏற்படுத்துகிறீர்கள் என மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

பேரறிவாளன் விவகாரத்தில் ஆளுநரின் பதில் ஒவ்வொரு முறையும் முரணாகவே உள்ளது. ஆளுநர் அமைச்சரவை முடிவுக்கு எதிராக சொந்த கண்ணோட்டத்தில் செல்ல தனி அதிகாரமில்லை. உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பின் படி, 7 பேர் விடுதலை விவகாரத்தில் அமைச்சரவையே முடிவெடுக்கலாம். அமைச்சரவை முடிவுக்கு எதிராக ஆளுநர் சென்றால் அது கூட்டாட்சி அமைப்பில் மிகப்பெரிய பாதகத்தை ஏற்படுத்தும்.

இதையெல்லாம் தவிர்க்க, ஆளுநர், குடியரசுத் தலைவர், அதிகாரம் குறித்த விஷயங்களுக்கு போகாமல் பேரறிவாளனை நாங்கள் ஏன் விடுவிக்கக் கூடாது? பேரறிவாளனை நாங்களே விடுவித்து இந்த வழக்கை முடித்துவைக்க ஒரே தீர்வு என கருதுகிறோம் என உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

மேலும், பேரறிவாளன் விவகாரத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது என ஏற்கெனவே தெளிவாகிவிட்டது. அதனால், பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் ஆளுநரை மத்திய அரசு கொண்டுவரவேண்டாம் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் நேற்று சட்டப்பேரவையில், தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் நேற்று அதிகாலை தேர் மின் கம்பியில் உரசியதால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்திடும் வகையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தஞ்சாவூர் கோவில் திருவிழா விபத்து அரசியல் செய்யக்கூடாது: முதல்வர் ஸ்டாலின்

தஞ்சாவூர் , ஏப். 28:

தஞ்சாவூர் கோவில் திருவிழா விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று ஆறுதல் கூறிய முதல்வர் ஸ்டாலின், காயமடைந்தவர்கள் சந்தித்துநலம்விசாரித்தார். மேலும், இந்த விபத்து விவகாரத்தில் அரசியல் பார்க்கக்கூடாது என்பதுதான் தனது எண்ணம் என்றும் விளக்கம் அளித்தார்.



தஞ்சாவூர் அருகே களிமேடு பகுதியில் அப்பர் குருபூஜை 94 ஆம் ஆண்டு விழா நேற்றுமுன் தினம் இரவு வெகு விமரிசையாக நடைபெற்று வந்தது. அப்போது, சப்பர உலா நடைபெற்ற நிலையில். அங்கு மேலே சென்ற உயர் அழுத்த மின்சார கம்பியின் மீது சப்பரம் உரசியதில் அதன் மீது மின்சாரம் பாய்ந்தது.

இதில், 11 பேர் உயிரிழந்தனர், சிலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பில் ரூ.5 லட்சம் நிவாரணம் அறிவிக்கப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று இரங்கல் தெரிவிப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வந்தடைந்தார்.

அங்கிருந்து தஞ்சாவூர் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சப்பரத்தில் மின்சாரம் பாய்ந்த இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதை தொடர்ந்து மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து முதல்வர் ஆறுதல் தெரிவித்தார். இதை தொடர்ந்து தமிழக அரசின் நிவாரண தொகையான ரூ.5 லட்சத்திற்கான காசோலையை அவர்களிடம் வழங்கினார். இதை தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்தார்.

பின்னர், இந்த சம்பவம் குறித்து தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கோயில் திருவிழாவில் நிகழ்ந்த துயர சம்பவம் குறித்த செய்திக்கேட்டு வேதனை அடைந்தேன், துடிதுடித்து போனேன்.

உடனடியாக மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டேன், மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததோடு தமிழக அரசின் நிவாரண தொகையையும் திமுக சார்பிலான நிவாரண தொகையையும் வழங்கினேன்.

படுகாயமடைந்தவர்களுக்கு அரசின் சார்பில் ரூ. 1 லட்சம் ரூபாயும் லேசான காயம் அடைந்தவர்களுக்கு ரூ. 50 ஆயிரமும், திமுக சார்பில் காயமடைந்த அனைவருக்கும் ரூ. 25 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சூழலை வைத்து சிலர் அரசியல் செய்ய பார்க்கின்றனர். இந்த விசயத்தில் அரசியல் செய்யக்கூடாது. போற்றுவார், தூற்றுவார் பற்றி கவலைப்படுவதில்லை' என்று தெரிவித்தார்.

## சபாநாயகர் நடுநிலை இல்லாமல் செயல்படுவது வருத்தம் அளிக்கிறது – எடப்பாடி பழனிசாமி

சென்னை , ஏப். 28:

தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் தேர் விபத்தில் 11 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சி சார்பில் சட்டப்பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது, அப்போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர், திருவிழா தொடர்பாக அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என தெரிவித்தார்.



இதை தொடர்ந்து பேசிய காங்கிரஸ் எம்.எல்.ஏ. செல்வபெருந்தகை, ஆன்மீகத்தில் அரசியலை கலக்க விரும்பவில்லை. அரசியல் ஆக்கக்கூடாது. டெல்டா மாவட்டங்களில் இதுபோல் நடக்கிறது. இதற்கு முன்னரும் இதே போல் பெரிய விபத்துகள் நடந்துள்ளது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவும், அவரது தோழியும் கும்பகோணம் மகாமகத்தில் நீராட சென்று போது கூட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்தனர்.

2014ம் ஆண்டு கும்பகோணம் விபத்தில் குழந்தைகள் உயிரிழந்தனர். தொடர்ந்து இதுபோல் நடக்கிறது. இனி வரும் காலங்களில் இதுபோல் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பேசினார்.

மகாமகத்தின் போது ஏற்பட்ட விபத்து குறித்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் பேசிய விவரங்களை காங்கிரஸ் சட்டமன்ற கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை பேசியவற்றை அவை குறிப்பிலிருந்து நீக்க கோரி அதிமுகவினர். தொடர்ச்சியாக கூச்சலிட்டு கோஷம் எழுப்பினர்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவையில் பேச முற்பட்ட போது, வெளிநடப்பு செய்துவிட்டு பேச அனுமதி கேட்டால் கொடுக்க முடியாது என பேரவை தலைவர் அனுமதி மறுத்தார். அதனைத் தொடர்ந்து பேரவை உள்ளேயே அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவையில் தர்ணாவில் ஈடுபட்ட அதிமுக உறுப்பினர்களை அவை காவலர்கள் மூலம் வெளியேற்ற பேரவை தலைவர் உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து பேரவை வளாகத்தில் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் , எதிர்க்கட்சித் தலைவரை பேச அனுமதிக்க வேண்டும்என்றுகண்டன கோஷம் எழுப்பினர்.

இதையடுத்து அதிமுகவை சட்டப்பேரவையில் வெளியேற்ற சபாநாயகர் உத்தரவிட்டதை தொடர்ந்து வெளியில் வந்து செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, அதிமுக இன்றுவெளிநடப்புசெய்த பின் செல்வபெருந்தகை தேவையில்லாத கருத்தை சபையில் பதிவு செய்துள்ளார். திமுக தூண்டுதல் பேரில் செல்வப்பெருந்தகை தொடர்ந்து பேசி வருவதாக சந்தேகம் வருகிறது. முன்னாள் முதல்வர் பெயரை வேண்டுமென்றே செல்வப்பெருந்தகை கூறி வருகிறார்.

சட்டசபையில் இதற்கு முன்பு என்னென்ன சம்பவம் நடந்தது என்பதெல்லாம் மக்களுக்கு தெரியும். இப்போது நாங்கள் நாட்டு மக்கள் பிரச்சனையை கொண்டு வந்து பேசிகிறோம். சபாநாயகர் நடுநிலை இல்லாமல் செயல்படுவது வருத்தம் அளிக்கிறது என்றார்.

இதனிடையே கனத்த இதயத்துடன் தான் அதிமுக உறுப்பினர்களை வெளியேற்ற உத்தரவிட்டதாக சபாநாயகர் அப்பாவு பேரவையில் விளக்கம் அளித்துள்ளார்.

### பெட்ரோல், டீசல் விலை உயர்வு

## தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள் வாட் வரியை குறைக்காதது ஏன்? பிரதமர் கேள்வி

டெல்லி , ஏப். 28:

பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மதிப்பு கூட்டு வரியை (VAT) குறைக்கவேண்டும் என்று மாநில அரசுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.



நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில், மாநில முதல்வர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஆலோசனை மேற்கொண்டார். காணொளி காட்சி மூலம் நடந்த இந்த ஆலோசனை கூட்டத்தில் கொரோனா தொற்று அதிகரிப்பு மற்றும், பெட்ரோல், டீசல் விலை உயர்வு குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, பெட்ரோல் - டீசல் விலை உயர்வையடுத்து வாட் வரியை குறைக்க வேண்டும், வாட் வரியை குறைப்பது கூட்டாட்சி தத்துவத்திற்கு உதவியாக இருக்கும் என்று மாநிலங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பல மாநிலங்களில் பெட்ரோல் - டீசல் விலை ரூ.100 தாண்டி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் பணவீக்கம் பல குடும்பங்களை பாதிப்படைய செய்கிறது.

குடிமக்களின் சுமையை குறைக்கும் வகையில் கடந்த நவம்பர் மாதம் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்தது. மாநிலங்கள் தங்கள் வரிகளைக் குறைத்து அதன் பலனை மக்களுக்கு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்.

குஜராத், கர்நாடகா உள்ளிட்ட சிலமாநிலங்கள் வரியைக் குறைத்தாலும் சில மாநிலங்கள் இதனை செய்யவில்லை. இதனால் மக்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை. இது ஒரு வகையில் இந்த மாநில மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

வரியைக் குறைக்கும் மாநிலங்கள் வருவாயில் இழப்பை சந்திப்பது இயற்கையானது. ஆனால் பல மாநிலங்கள் இதனை ஏற்றுக்கொண்டு அந்த நடவடிக்கையை எடுத்துள்ளன. கர்நாடகா வரிகளைக் குறைக்காமல் இருந்திருந்தால், கடந்த ஆறு மாதங்களில் கூடுதலாக ரூ.4000 முதல் ரூ.5,000 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டியிருக்கும்.

குஜராத் மாநிலம் மேலும் ரூ.3,500-4,000 கோடி ரூபாய் வசூலித்திருக்கும். ஆனால், இதே சமயத்தில் வாட் வரியை குறைக்காத மகாராஷ்டிரா மாநிலம் ரூ.3,500 முதல் 5,500 கோடி வரை கூடுதல் வருவாய் ஈட்டியுள்ளது.

மாநில அரசு எரிபொருள் வரியை குறைத்து அதன் பயனை குடிமக்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உலகளாவிய நெருக்கடிகளின் போது, கூட்டுறவு கூட்டாட்சியின் உணர்வைப் பின்பற்றி, ஒரு குழுவாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று நான் அனைத்து மாநிலங்களையும் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்










| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,912 | Rs.5,311 |


## வரலாற்றில் இன்று



1926 செருமனி, சோவியத் ஒன்றியம் இரண்டும் மூன்றாவது நாடு ஒன்று மற்றைய நாட்டைத் தாக்க முற்படும் போது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நடுநிலைமை வகிக்கும் உடன்பாடு இரு நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்டது.

1933 நாட்சி ஜெர்மனி யெகோவாவின் சாட்சிகள் மீதான மத ஒறுப்பை ஆரம்பித்தது.

1955 இந்தோனேசியாவின் பண்டுங் நகரில் ஆசியா, மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. குடியேற்றவாதம், இனவாதம், மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1957 சூயெசு நெருக்கடி: ஐநா அமைதிப்படை தருவிக்கப்பட்டதை அடுத்து சுயஸ் கால்வாய் மீண்டும் திறக்கப்பட்டது.

1961 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த "வாசா" என்ற சுவீடனின் கப்பல் மீட்டெடுக்கப்பட்டது.

1964 இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டத்திற்கெதிராக செல்லையா கோடீஸ்வரன் என்பவர் தொடுத்த வழக்கில் இச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானது என மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.[1]

1965 டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

1967 சோயூஸ் 1 விண்கலத்தில் பயணித்த உருசிய வீரர் விளாடிமிர் கொமரோவ் அவரது வான்குடை திறக்கமுடியாமல் போனதால் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதலாவது வீரராவார்.

1970 காம்பியா பொதுநலவாயத்தின் கீழ் குடியரசானது. தவ்தா யவாரா அதன் முதலாவது அரசுத்தலைவரானார்.

1990 டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைநோக்கியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

1993 இந்தியாவில் பஞ்சாயத்து இராச்சியம் அமைக்கப்பட்டது.

1993 லண்டன் நகரில் ஐரியக் குடியரசுப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுமையுந்து குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் படுகாயமடைந்தனர்.

2004 ஐக்கிய அமெரிக்கா லிபியா மீது 18 ஆண்டுகளுக்கு முன்னர் விதித்த பொருளாதாரத் தடையை நீக்கியது. லிபியா பேரழிவு ஆயுதங்களை அழிக்க உடன்பட்டது.

# திருமயம் ஒன்றியத்தில் பள்ளி செல்லாக் குழந்தைகளை கணக்கெடுக்கும் பணி தீவிரம்



புதுக்கோட்டை ஏப்.28-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஒன்றியத்தில் வட்டார வளமைய அலுவலர்கள் கிராமம் கிராமமாக சென்று திருமயம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வளையலன் வயல், அரசம்பட்டி குடியிருப்பு பகுதிகளில் பள்ளி செல்லா குழந்தைகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்றது.

இதில் அரசம்பட்டி குடியிருப்பை சார்ந்த பாண்டி ரதி என்ற பள்ளி செல்லா குழந்தையை அடையாளம்கண்டு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு சேர்க்கப்பட்டது. இதேபோல்10மாணவர்களை அடையாளம் கண்டு வயதிற்கு ஏற்ற வகுப்பில் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். இதில் வட்டார வளமைய மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரிய பயிற்றுநர்கள் அன்பழகன், பிரகதாம்பாள் பரிசுத்தம், அருணா மற்றும்வளையன் வயல் பள்ளி ஆசிரியர்கள் சரவணமுத்து சண்முகம் கலந்து கொண்டனர்,






# அரிமளத்தில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி



அரிமளம் ஏப்.28-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 32 ஊராட்சிகளில் உள்ள வார்டு உறுப்பினர்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் ஏப்ரல் 26, 27 ஆகிய இரண்டு நாள் புத்தாக்கப் பயிற்சி அரிமளம் கணேசன் செட்டியார் விசாலாட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) அமுதவள்ளி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)ரவி ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியினை துவக்கி வைத்தனர்.மேலும் இதில் கலந்து கொண்ட வார்டு உறுப்பினர்களுக்கு, பயிற்றுனர்கள் விமலா வள்ளல், வித்யா, சிவக்குமார், ராஜ்குமார் ஆகியோர் ஊராட்சியில் உறுப்பினர்களின் பங்கு மற்றும் செயல்பாடு பற்றி பயிற்சி அளித்தனர். இந்நிகழ்ச்சியில் ஏராளமான வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டம் தா.பழூர் மற்றும் திருமானூர் பகுதிகளில் அங்கன்வாடி சீர் திருவிழா



அரியலூர் ஏப்.28-

அரியலூர் மாவட்டம், தா.பழூர் மற்றும் திருமானூர் வட்டாரத்தில், அங்கன்வாடி சீர் திருவிழா நடை பெற்றது.

இது பற்றி ஜெயங்கொண்டம் ரோஸ் தொண்டு நிறுவன இயக்குனர், ஜான் திருநாவுக்கரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: சென்னையிலுள்ள இளங்குழந்தையின் உரிமைபேணும்நிறுவனம் மற்றும்ஜெயங்கொண்டம் ரோஸ் தொண்டு நிறுவனம் சார்பில், அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியத்தில் உள்ள தூப்பாபுரம், கோடாலி கருப்பூர், சாத்தம்பாடி, தா.பழூர் மற்றும் விக்ரமங்கலம் ஆகிய ஐந்து அங்கன்வாடி மையங்களிலும்,

திருமானூர் ஒன்றியத்தில் திருமானூர், பெரியமறை, பூண்டி, புதுக்கோட்டை, பளிங்காநத்தம் ஆகிய 5 அங்கன்வாடி மையங்கள் உட்பட மொத்தம் பத்து மையங்களிலும், கற்றல், கற்பித்தல், உபகரணங்கள், குழந்தைகளுக்கான நாற்காலிகள் மற்றும் மையத்திற்கு தேவையான பொருட்கள் கல்விச் சீராக வழங்கப்பட்டது. தூப்பாபுரம் கிராமத்தில் நடைபெற்ற முதல் நிகழ்ச்சிக்கு, இளங்குழந்தையின் உரிமை பேணும் நிறுவனத்தின் மேலாண் அறங்காவலரும், தமிழ்நாடு இளங்குழந்தை பராமரிப்பு சேவைக்கான கூட்டமைப்பின் மாநில அமைப்பாளருமாகிய பேராசிரியர், க.சண்முக வேலாயுதம் தலைமை ஏற்று, துவக்கி வைத்து பேசினார். அதனை தொடர்ந்து ஏனைய ஒன்பது மையங்களிலும் சீர் வழங்கும் திருவிழா நடை பெற்றது. இந்நிகழ்வுகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள், ஊ.ம.தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலக பிரதிநிதிகள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், சம்பந்தப்பட்ட கிராம பொதுமக்கள், மற்றும் பெற்றோர்கள் திரளாக பங்கேற்றனர். ஒவ்வொரு மையத்திற்கும்,தலா ரூபாய் 10ஆயிரம் மதிப்பிலான கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியபொருட்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ரோஸ் தொண்டு நிறுவன இயக்குநர் ஜான் கே.திருநாவுக்கரசு மற்றும் கள அலுவலர் தர்மராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

## மதுரையை சேர்ந்த மருத்துவருக்கு

# சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் சார்பாக சிறந்த வர்ம சிகிச்சை மருத்துவருக்கான விருது



மதுரை ஏப்.28-

மதுரை நாராயணபுரம் பேங்க் காலனி இரண்டாவது தெருவில் அமைந்துள்ள ஆயுஷ்யம் வர்ம சிகிச்சை மையத்தின் தலைமை மருத்துவர் ஆர்த்தி கடந்த 15 ஆண்டுகளாக தண்டுவட பாதிப்பு, மூட்டு வாதம், கழுத்து எலும்பு தேய்மானம், நரம்பு பிரச்சனை, ஒற்றைத் தலைவலி, அஜீரணம், சைனஸ், மலச்சிக்கல், மாதவிடாய்கோளாறுகள், வெள்ளைப்படுதல், தோல் வியாதி, உடல் பருமன் குறைப்பு மற்றும் பல விதமான நோய்களுக்கும் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

இதில் சிறப்பு சிகிச்சையாக தண்டுவட பாதிப்பு, எலும்பு தேய்மானம், நரம்பு பிரச்சனைகளுக்கு வர்ம சிகிச்சை முறையில் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து குணப்படுத்தி உள்ளார்கள். இவரது சிறந்த மருத்துவ சேவையை பாராட்டி மருத்துவமனையில்வைத்து சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் சார்பாக சிறந்த வர்ம சிகிச்சை மருத்துவருக்கான விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனர் நிமலன் நீலமேகம் தலைமையில் மற்றும் சிறப்பு விருந்தினராக திமுக மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் வாசுகி சுகுமார் முன்னிலையில் மற்றும் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் தென் மண்டல தலைவர் சுந்தர் மற்றும் மதுரை மாவட்ட பொதுச்செயலாளர் மருத்துவர் கஜேந்திரன், பெருமாள் நீலமேகம், உதவி மருத்துவர் பாலாஜி, பத்திரிகையாளர் மயிலேறி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வைரிவயல் ஸ்ரீ வீரமுனியாண்டவர் சந்தனகாப்பு விழா மாட்டு வண்டி குதிரை வண்டி பந்தயம்



அறந்தாங்கி,ஏப்.28:

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தாலுகா வைரிவயல் கிராமத்தில் அருள்மிகு வீரமுனியாண்டவர் சந்தனகாப்பு விழாவை முன்னிட்டு வருடந்தோறும் மாட்டு வண்டி குதிரை வண்டி எல்கைப் பந்தையம் நடத்தப்படுவது வழக்கம்.

இந்தாண்டு நடைபெற்றமாட்டுவண்டி எல்கை பந்தையத்தில் புதுக்கோட்டை ,தஞ்சை, ராமநாதபுரம் தூத்துக்குடி , சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து 100 க்கும் மேற்பட்டஜோடி மாடுகளும் குதிரைகளும் போட்டியில் பங்கேற்றன. வைரிவயலில் இருந்து 10 கிலோ மீட்டர் தூரம் பந்தை எல்லை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இதில் பெரியமாடு, நடுமாடு,கரிச்சான் மாடு, சின்னமாடு, பெரிய குதிரை, நடுகுதிரை ,சின்னகுதிரை என மாடுகள் நான்கு பிரிவுகளாகவும் குதிரை மூன்று பிரிவுகளாக வரும் பந்தையம் நடைபெற்றது. பந்தையத்தில் காளைகள் சீறிப்பாய்ந்து முதல் மூன்று இடங்களை பிடித்த மாடுகளுக்கு 5 லட்சத்து 34 ஆயிரம் ரொக்கப்பணம் பரிசாக வழங்கப்பட்டது.

மேலும் மாடுகளை சிறப்பாக ஓட்டி வந்த சாரதிகளுக்கு கொடிப்பரிசு மற்றும் கோப்பைகள் கொடுத்து கௌரவிக்கப்பட்டனர். நிகழ்ச்சியை ஏராளமான பொதுமக்கள், சாலையின் இருபுறங்களில் நின்று ரசிகர்கள் கண்டுகளித்தனர். அறந்தாங்கி காவல்துணை கண்காணிப்பாளர் தினேஷ் குமார் தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்திற்கான விழிப்புணர்வு முகாம்



புதுக்கோட்டை ஏப்.28-

புதுக்கோட்டை மாவட்டம்,திருவரங்குளம் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டு திட்டத்திற்கான விழிப்புணர்வு முகாம் பற்றி மத்திய அமைச்சகத்தின் மூலம் விவசாயிகளுக்கு ஆன்லைன் வழியாக ஆலோசனை வழங்கப்பட்டதை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெற்றிவேல் தலைமையில் வேளாண்மை உதவி அலுவலர் ஆதிமூலம் முன்னிலையில் விவசாயிகள் மகளிர் குழுவினர் பார்வையிட்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி மேலாளர் ஆரோக்கியராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

# ஒசூர் அரசுப்பள்ளி மாணவி 20 வயதிற்குட்பட்ட இந்திய கைப்பந்து அணியில் இடம்பிடித்து சாதனை

## வீரங்கனைக்கு மாநகர மேயர் வாழ்த்து



கிருஷ்ணகிரி,ஏப்.28:

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி கோபிகா, 12ஆம் வகுப்பு படித்துவருகிறார்.

இந்நிலையில் ஈகல்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப்பில் கைப்பந்து போட்டிகளுக்கான பயிற்சி பெற்று விளையாடி வந்தார், பல்வேறு பகுதிகளில் நடைப்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தார் மாணவி கோபிகா. அதனடிப்படையில் 20 வயதிற்குட்பட்டோருக்கான இந்திய கைப்பந்து அணியில் இடம் பிடித்து ஒசூருக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் சாதனை படைத்துள்ளார்.

கஜகஸ்தானின் சமே நகரில் வருகிற ஜுலை மாதம் 4 ம் தேதி முதல் 11ஆம் தேதிவரை நடைப்பெற உள்ள ஏசியன் கைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் விளையாட உள்ளார்.

இந்த நிலையில் வீராங்கனை கோபிகா ஒசூர் மாநகர மேயர் சத்யாவை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது மேயர் நமக்கு கிடைக்கும் வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக்கொண்டு பெற்றோருக்கும், சுற்றாருக்கும் பெருமை சேர்க்கும் வகையில் வெற்றிகளை குவித்திட தனது சார்பில் உதவிகளை வழங்குவதாக கூறி ஊக்கப்படுத்தினார். மேலும் பயிற்சியாளர் தாயுமானவன் மற்றும் மாணிக்கவாசகம் இருவரையும் மேயர் பாராட்டினார்.

## மணமேல்குடி ஒன்றியத்தில் தலைமை ஆசிரியர்களுக்கு

# பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்பு உறுப்பினர்கள் தேர்வு தொடர்பான கூட்டம்



மணமேல்குடி ,ஏப்.28:

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியத்திற்கு உட்பட்ட 50 சதவீத தொடக்கநிலை தலைமை ஆசிரியர்களுக்கு பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்பு உறுப்பினர் தேர்வு தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தினை மணமேல்குடி வட்டார கல்வி அலுவலர் மதிப்பிற்குரிய அன்பழகன் தலைமையில் தொடங்கியது.

மணமேல்குடி வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு சிவயோகம் முன்னிலை வகித்தார். புதுக்கோட்டை மாவட்டம் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விஸ்வநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு கூட்டத்தில் உறுப்பினர்களை நேர்மையாக எந்தவித பிரச்சனையும் வராமல் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், பள்ளி மேலாண்மை குழு கட்டமைப்பு உறுப்பினர்கள் தேர்வு செய்வதில் 20 உறுப்பினர்களையும் தேர்வு செய்த அன்றே சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் 25 தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் முத்துராமன் வேல்சாமி மற்றும் சிறப்பாசிரியர்கள் மணிமேகலை கோவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### செய்யூர் அடுத்த கொடூர் கிராமத்தில் தமிழக அரசின் சார்பில்

# திருநங்கைகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா

### செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு



செங்கல்பட்டு , ஏப்28–

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட திருநங்கைகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கென தனியாக குடியிருப்பு பகுதிகள் இல்லாததால் திருநங்கைகள் வெவ்வேறு பகுதிகளில் வீடுகள் வாடகை எடுத்து தங்கி வந்தனர்.

ஆனால் இவர்கள் தங்கியுள்ள பகுதிகளில் வசிக்கும்மற்றபொதுமக்கள் திருநங்கைகள் தங்குவதற்கு எதிர்ப்பு தெவிப்பதால் அவர்கள் நிரந்தரமாக தங்க இடம் கிடைக்காமல் பல்வேறு இன்னல்களை சந்தித்து வந்தனர்.

இதனால் திமுக ஆட்சி பெறுப்பெற்றவுடன் திருநங்கைகள் தாங்கள் தங்குவதற்கு நிரந்தர வசிப்பிடம் அமைத்து தர வேண்டும் என தமிழக முதல்வரிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். அதனை பரிசீலனை செய்த தமிழக முதல்வர் திருநங்கைகளின் நலன் கருதி திருநங்களுக்கென குடியிருப்பு பகுதிகள் ஏற்படுத்தி தர மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்தார். அதன்படி செங்கல்பட்டு மாவட்டம் இலத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கொடூர் ஊராட்சி ஆட்சிவிளாகம் பகுதியில் 50 திருநங்கைகளுக்கு இலவசமனை பட்டா கடந்த சில மாதங்களுக்கு முன் வழங்கப்பட்டது.

இந்நிலையில் இன்று சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, வேலூர் தி பிரிட்ஜ் அறக்கட்டளை, மொபிஸ் இந்தியா பவுன்டேஷன் ஆகியோர் இணைந்து வீட்டுமனை வழங்கப்பட்ட 50 பேருக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்தது. மாவட்ட ஆட்சியர் ராகுல்நாத் தலைமையில் நடந்த இந்த அடிக்கல் நாட்டு விழா இலத்தூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் சுபலட்சுமி பாபு, ஒன்றியக்குழு துணை தலைவர் கிருஷ்ணவேணி தணிகாச்சலம் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமை துறை அலுவலர் சங்கீதா வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ராகுல்நாத், காஞ்சி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், திமுக காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல் , செய்யூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு ஆகியோர் கலந்து கொண்டு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினர். நிகழ்ச்சியில் இலத்தூர் ஒன்றியச் செயலாளர்கள் ராமச்சந்திரன், முகையூர் பாபு ஊராட்சி மன்றத்தலைவர் மா.புண்ணியகோட்டி ஆகியோர் கலந்து கொண்டனர். தங்களது கோரிக்கையை ஏற்று தங்களுக்கு வீட்டுமனை வழங்கிய தொகுப்பு வீடு கட்டிக்கொடுக்கும் தமிழக முதல்வருக்கு திருநங்கைகள் நன்றி தெரிவித்தனர்

### மயிலாடுதுறையில் ஓட்டுனர் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் சார்பில்

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறை , ஏப்28–

மயிலாடுதுறையில் ஓட்டுனர் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் சார்பில் பெட்ரோல் டீசல் விலை உயர்வை கண்டித்தும் , பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் மினி சரக்கு வாகனத்தை கயிறு கட்டி இழுத்த படி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலாடுதுறையில் ஓட்டுனர் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் சார்பில் மத்திய, மாநில அரசை கண்டித்து சின்ன கடை தெருவில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னதாக பெட்ரோல் டீசல் விலை உயர்வை கண்டித்து புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மினி சரக்கு வாகனத்தை கயிறு கட்டி இழுத்தபடி ஊர்வலமாக வந்தனர்.

பின்னர் மாவட்ட தலைவர் கணேசன் தலைமையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து வாகனங்களுக்கான FC கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டியும் , சுங்க கட்டண உயர்வை குறைக்க கோரியும் , நலவாரிய அட்டை வைத்திருக்கும் ஓட்டுநர்களுக்கு மாதம் 5 ஆயிரமாக ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 500க்கும் மேற்பட்ட ஓட்டுனர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் சங்கம் கூட்டம்



நாகப்பட்டினம், ஏப்.28–

நாகை மாவட்டம் திருமருகல் தனியார் மண்டபத்தில் தமிழ்நாடு அரசு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குனர்கள்,துப்புரவு பணியாளர்கள்,தூய்மை பணியாளர்கள் சங்க ஒன்றிய கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குனர்கள் சங்க ஒன்றிய தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய செயலாளர் கணேசன் முன்னிலை வகித்தார். ஒன்றிய பொருளாளர் ராஜேந்திரன் வரவேற்றார். சங்கத்தின் மாநில தலைவர் மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், அகவிலைப்படி சம்பளம் உயர்த்திவழங்கவேண்டும், பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், அனைத்து ஊராட்சிகளிலும் பணியாளர்களுக்கு சமமாக சம்பளம் வழங்க வேண்டும், ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஓய்வூதிய தொகையை உடனே வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதில் மாநில செயற்குழு உறுப்பினர் லட்சுமி,முன்னாள் ஒன்றிய தலைவர் செல்வராஜ், முன்னாள் ஒன்றிய செயலாளர் வீராசாமி மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய துணைச் செயலாளர் பாஸ்கர் நன்றி கூறினார்.



திருவள்ளூர் மாவட்டம் ,திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்,வேடங்கி நல்லூர் பகுதியில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பாக காஞ்சிபுரத்திலிருந்து புதிதாக திருவள்ளூர் பதிவு மாவட்டம் தெவ்ற்றுவிக்கப்பட்டதால்,புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருவள்ளூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தை தமிழக முதல்வர் காணொலி காட்சி வாயிலாக நேற்று திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து வேடங்கி நல்லூரில் உள்ள திருவள்ளூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ் குத்துவிளக்கேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் துணை பதிவுத்துறை தலைவர் என்.சேகர், மாவட்ட பதிவாளர் பா . கல்பனா,தணிக்கை மாவட்ட பதிவாளர் ராமச்சந்திரன், உதவி பதிவு துறை தலைவர் கீதா, சார்பதிவாளர் சுமதி ,சார் பதிவாளர்கள் பதிவு துறை பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள்




### தேர் திருவிழாவில் விபத்து

# உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 25 லட்சம் வழங்க வேண்டும் சிவசேனா கட்சி கோரிக்கை

தஞ்சை , ஏப்28–

தஞ்சை மாவட்டம் களிமேடு பகுதியில் நேற்று அப்பர் குருபூஜையை முன்னிட்டு சப்பரம் திருவீதி உலா நிகழ்ச்சியில் மின்சார துறை ஊழியர்களின் கவனக்குறைவு காரணமாக, அலட்சியம் காரணமாகவும் மின்கம்பியில் உரசி தேரில் மின்சாரம் பாய்ந்து 2 சிறுவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இன்னும் பலபேர் காயம் அடைந்து உள்ளார்கள் தேர்த்திருவிழாவில் கவன குறைவாகவும் அலட்சியமாகவும் செயல்பட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், மின்துறை அலுவலர்கள், ஊழியர்கள் மீது உடனடியாக துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் தங்கள் இன்னுயிர் இழந்த குடும்பத்தினருக்குதலா25லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும், காயமடைந்தவர்களுக்கு காயத்தின் தன்மையைப் பொறுத்து இழப்பீடு வழங்க வேண்டும் உரிய மேல் சிகிச்சை கிடைக்க மாவட்ட நிர்வாகம் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிவசேனா கட்சி தமிழ்நாடு மாநில கமிட்டி தலைவர் ரவிச்சந்திரன், மாநில முதன்மை செயலாளர் சுந்தரவடிவேலன் ஆகியோர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் வெம்பாக்கம் வட்டம் தூசி கிராமத்தில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 500க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்களுக்கு வேட்டி சேலை நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அதிமுக கழக நிர்வாகிகள் ஒன்றிய செயலாளர்கள் எம்.மகேந்திரன், அரங்கநாதன், திருமூலன், நகர செயலாளர் வெங்கடேசன், நகர அவைத் தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட கழக நிர்வாகிகள் ரகு, கன்னியப்பன்,ராஜ் கணேஷ்,வெங்கடேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி மயிலாடுதுறை மாவட்டதிலுள்ள தலைஞாயிறு என். பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையை இயக்குவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா ஆய்வு செய்தார்.

# ஆதரவற்ற முதியவரின் சடலம் நல்லடக்கம்



திருவள்ளூர் ஸ்பார்ட்டன்ஸ் ரோட்டரி சங்கத்தின்முன்னாள் தலைவர் அனுகிரஹா கார்த்திக் தனது பிறந்தநாளை முன்னிட்டு ஆதரவற்ற 78வயது முதியவரின் சடலைத்தை காவல்துறை அனுமதி பெற்று நல்லடக்கம் செய்தார்

# திருவரங்குளம் ஆஞ்சநேயர் கோவில் கோபுரத்தை சரிசெய்ய கோரிக்கை

புதுக்கோட்டை , ஏப்28–

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் 9 தீர்த்தக் குளங்களில் ஒன்றான நன்னாரி குளக்கரையில் அமைந்துள்ள பழம்பெருமை வாய்ந்த ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்று 12 ஆண்டுகளுக்கு மேல் நிறைவுற்ற நிலையில் கோவில் கோபுரம் கஜா புயலின் போது பெயர்ந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது.

ஏதேனும் விபரீத விளைவுகள் ஏற்படும் முன்பாக கோபுரத்தை சரி செய்து இந்த கோவிலில் கும்பாபிஷேக பணி நடைபெற தமிழக அரசும் தேவஸ்தானமும் உடனடியாக நடவடிக்கை எடுக்க இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




### ஆரணி பேரூராட்சிமன்றக் கூட்டத்தில்

# நெகிழி பொருட்களை பயன்படுத்தும் கடைகள்–நிறுவனங்களுக்கு அபராதம் விதிப்பது என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது



ஊத்துக்கோட்டை, ஏப்28–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சிமன்ற கூட்டம் மன்ற வளாகத்தில் இக்கூட்டத்துக்கு பேரூராட்சிமன்றதலைவர் எம்.ராஜேஸ்வரி தலைமை தாங்கினார்.

துணைத் தலைவர் வக்கீல் க.சுகுமார்,செயல் அலுவலர் எஸ்.கலாதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆரணி பேரூராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் குரங்குகள், நாய்கள், பன்றிகள் தொல்லை அதிகமாக உள்ளதால் அதனைதடுக்கநடவடிக்கை எடுக்க வேண்டும்,ஆரணி ஆற்றின் குறுக்கேசெக்டேம் கட்டி நீரை தேக்கி வைக்க வேண்டும்,பேரூராட்சியில் உள்ள சமுதாய கூடத்தில் மக்கள் உணவு அருந்தவும், சமையல் செய்யவும் கூடுதலாக அறைகள் கட்ட வேண்டும், ஆரணி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும், மழைநீர் கால்வாய்களை தூர்வாரி செப்பனிட வேண்டும்,பஸ் நிறுத்தத்தில் உள்ள பயணிகள் நிழற்குடையில் பயணிகள் அமர இட வசதிசெய்துதரவேண்டும், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி எனப்படும் பிளாஸ்டிக்கை பயன்படுத்தும் கடைகள்– நிறுவனங்களுக்கு அபராதம் விதிப்பது என்பது உள்ளிட்ட 45 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நியமன குழு உறுப்பினரும் கவுன்சிலருமான டி.கண்ணதாசன், பொன்னரசி நிலவழகன், சந்தானலட்சுமி ஓம் சக்திகுணபூபதி, பிரபாவதி சேஷாத்ரி, குமார், வக்கீல் சதீஷ் உள்ளிட்ட 15 கவுன்சிலர்களும் கலந்து கொண்டனர். மன்ற பொருட்களை பேரூராட்சி இளநிலை உதவியாளர் முருகவேல் வாசித்தார். வரவேற்றார். முடிவில், பேரூராட்சி இளநிலை உதவியாளர் யுவராஜ் நன்றி கூறினார்.

# மாயூரம் வேதநாயகம் பிள்ளைக்கு மயிலாடுதுறையில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கப்படும் செய்தித்துறை அமைச்சர் அறிவிப்பு



திருச்சி , ஏப்28–

மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஒரு புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர். இவர் 1879–இல் எழுதிய பிரதாப முதலியார்சரித்திரம் என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம். இவர் தந்தையார் சவரிமுத்துப் பிள்ளை, தாயார் ஆரோக்கிய மரி அம்மையார் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குளத்தூரில் பிறந்தார்.

இவரின் பெற்றோர், திருச்சிராப்பள்ளிமாவட்டம் திருச்சிராப் பள்ளியில் இருந்து மதுரைக்குத் தொடர்வண்டியில் செல்கையில் குளத்தூர் தொடர்வண்டிநிலையத்தில் சாமுவேல் வேதநாயகம் பிள்ளை 11 அக்டோபர் 1826 பிறந்தார்.

1876–1878 ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபால கிருஷ்ண பாரதியார் நீயே புருஷ மேரு என்ற பாடலை எழுதினார்.

தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளைக்கு மயிலாடுதுறையில் ரூபாய்.3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கப்படும் செய்தி மற்றும் விளம்பரம் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்துள்ளார். (அக்டோபர் 11, 1826 – பிறந்தார், ஜூலை 21, 1889 மறைந்தார்)

# சீர்காழி தனியார் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா ஏராளமான மாணவிகள் பங்கேற்பு



சீர்காழி , ஏப்28–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தனியார் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த 13வது ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு பேசிய ஏடிஎஸ்பி தங்கவேல் சுய முயற்சியோடு உழைத்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம் என தெரிவித்தார். சீர்காழி விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 13 வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது விழாவிற்கு கல்லூரி செயலர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

இயக்குனர்கள் டாக்டர் முத்துக்குமார் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் முதல்வர் சுகந்தி வரவேற்று கல்லூரியின் ஆண்டு அறிக்கையை படித்தார் விழாவின் சிறப்பு விருந்தினராக மயிலாடுதுறை மாவட்ட ஏடிஎஸ்பி தங்கவேல் கலந்துகொண்டு 2016 –2020 வரை பயின்ற 650 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி முதல் மூன்று இடம் பெற்ற மாணவிகளுக்கு பதக்கங்களையும் வழங்கினார்.

பள்ளிப்படிப்பை முடித்தவுடன் உயர் கல்வியில் சேர்ந்து சுய முயற்சியோடு உழைத்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம் என்றார். விழாவில் குட் சமரிடன் பப்ளிக் ஸ்கூல் இயக்குனர் பிரவீன் வசந்த் , பப்ளிக் பள்ளி முதல்வர் ஜாஸ்மின் வர்ணிகா, கல்வி நிறுவனங்களின் நிர்வாக அலுவலர் சண்முகம் மற்றும் கல்லூரியின், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவிகள் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர். துணை முதல்வர் ஜெயந்தி கிருஷ்ணா நன்றி கூறினார்.

### வெம்பாக்கம் வட்டம் தூசி கிராமத்தில்

# அக்னி மகோற்சவ மகாபாரத விழா: மாவட்ட கழக செயலாளர் தூசி கே.மோகன் தொடங்கி வைத்தார்



தி.மலை , ஏப்28–

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் வட்டம் தூசி, தூசி மதுரா அனுமந்தபேட்டை கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ திரௌபதை அம்மன் உடனுறை தர்மராஜா ஆலயத்தில் அக்னி மகோற்சவ மகாபாரத திருவிழா நேற்று சிறப்பாக தொடங்கப்பட்டது.

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் செய்யாறு சட்டமன்ற உறுப்பினருமான தூசி கே.மோகன் தலைமையில் அக்னி மகோற்சவ மகாபாரத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பித்து வைத்தார். இவ்விழாவானது சித்திரை மாதம் 14ஆம் தேதி 27–04–2022 புதன்கிழமை அன்று முதல் வைகாசி மாதம் 2ஆம் தேதி 16–05–2022 திங்கட்கிழமை வரை நடைபெற இருக்கும் அக்னி மகோற்சவ மகாபாரத திருவிழாவானது விநாயகர் வணக்கமும் மகாபாரதம் ஆரம்பிக்கப்பட்டு கதை சொற்பொழிவுகள் உடன் 20 நாட்கள் மகாபாரத திருவிழா நடைபெற உள்ளது.

தூசி ஊராட்சி மன்ற தலைவர் எம். வெற்றிச்செல்வன், ஒன்றிய கவுன்சிலர் எம். தயாளன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எம்.பி.ராஜமாணிக்கம், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் பி.செந்தில் செய்யாறு சர்க்கரை ஆலை தலைவர் கே.குமரேசன் ஊராட்சி மன்ற உறுப்பினர் பெ.சகுந்தலா பெருமாள், கன்னியப்பன், கிராம நாட்டாமைதாரர்கள், விழா குழுவினர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வேலாடிப்பட்டி உயர்நிலை பள்ளியில் தொன்மை பாதுகாப்பு மன்றம் தொடங்கப்பட்டது



கந்தர்வக்கோட்டை, ஏப்.28-

வேலாடிப்பட்டி உயர்நிலை பள்ளியில் தொன்மை பாதுகாப்பு மன்றம் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் விஜிலா ஜோய் தலைமை வகித்தார். நிகழ்வில் பள்ளியின் தொன்மைப் பாதுகாப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர் கணேசன் வரவேற்றார். பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் நிர்மல் முன்னிலை வகித்தார்.

தொன்மை பாதுகாப்பு மன்றத்தை தஞ்சை தமிழ் பல்கலைக்கழக தொல்லறிவியல் துறை ஆய்வாளரும், புதுக்கோட்டை தொன்மை பாதுகாப்பு மன்ற பொறுப்பாளருமான ஆ. மணிகண்டன் தொன்மை பாதுகாப்பு மன்றத்தை தொடங்கி வைத்து பேசியபோது,

தமிழர்களின், பண்பாட்டு அடையாளங்களையும் தொன்மங்களையும் பாதுகாத்து போற்றிட வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இந்தியாவின் பண்பாடு கலாச்சாரம் என்பது உலகம் முழுவதும் போற்றப்படும் ஒன்றாகும்.

இந்தப் பெருமை நமது முன்னோர்களின் கலை தொழில்நுட்பம் அறிவு ஆகியவற்றால் நமக்கு கிடைத்தது.

பழமையான கட்டுமானங்கள் கல்வெட்டுக்கள் ஓலைச்சுவடிகள் செப்பு பட்டயங்கள் பழமையான பொருட்கள் உள்ளிட்டவை வரலாற்றை நேரடியாக நமக்கு தெரிவிக்க கூடியவையாக உள்ளன. அகழ்வு செய்யப்படும் இடங்களில் கிடைக்கும் பல்வேறு பொருட்கள் பானை ஓடுகள் அவற்றில் உள்ள குறியீடுகள் எழுத்துக்கள் ஆகியவை நமது முன்னோர்கள் கொண்டிருந்த மொழி அறிவை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

பொற்பனைக் கோட்டை கீழடி ஆதிச்சநல்லூர் சிவகளை ஆகிய இடங்களில் கிடைக்கும் பொருட்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியான அமைப்பு உடையவையாக இருக்கின்றன.

இந்த மன்றத்தை முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆலோசனைப்படி அப்போதைய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்ததற்கான நோக்கம் இளம் வயதிலேயே நமது பண்பாட்டையும் தமிழையும் குழந்தைகள் கற்றுக்கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் வருங்கால சந்ததி வரலாறு பண்பாட்டை போற்றுவதற்கு சரியாக அமையும் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது. தற்போது பள்ளிக்கல்வித் துறை மானிய கோரிக்கையின் போது பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஆசிரியர்களுக்கு தொல்லியல் பயிற்சி வழங்கப்பட உள்ளது, என்று பேசினார்.

இறுதியாக ஆசிரியர் குணசேகரன் நன்றி கூறினார்




# இந்தியாவில் மின் தேவையை பூர்த்தி செய்ய போதிய நடவடிக்கை எடுப்பதாக மத்திய அரசு தகவல்

டெல்லி ஏப்.28-

இந்தியாவில் மே, ஜூன் மாதங்களில் மின் தேவை 215 - 220 ஜிகா வாட் அதிகரிக்கும் என மத்திய அரசு கணித்துள்ளது. அப்படி மின் தேவை அதிகரிக்கையில், மின் தேவையை பூர்த்தி செய்ய அனைத்து வளங்களையும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவில் அதிகரித்து வரும் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய அனைத்து வளங்களையும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பல்வேறு மாநிலங்களில் மின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டின் மின் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மத்திய அரசு கூறியிருப்பது, கவனம் ஈர்க்கும் விஷயமாக பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக மத்திய அரசு தெரிவித்திருக்கும் தகவலின்படி, "நாட்டின் மின்சாரத் தேவை கடந்த ஆண்டை விட இந்தாண்டு அதிகரித்துள்ளது. இந்த தேவை அதிகரிப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகின்றது. இந்த ஆண்டு மார்ச் மாதம் அகில இந்திய மின் தேவை 8.9 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

இந்நிலை தொடர்கையில் மே, ஜூன் மாதங்களில் மின்சாரத் தேவை 215 - 220 ஜிகா வாட் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து நாட்டில் தங்கு தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க அரசு, பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது" எனக் கூறியுள்ளது

# அரியலூர் அதிமுக மாவட்ட செயலாளராக தாமரை எஸ். ராஜேந்திரன் மீண்டும் தேர்வு



அரியலூர் ஏப்.28-

அரியலூர் அதிமுக மாவட்ட செயலாளராக, தாமரை எஸ்.ராஜேந்திரன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அரியலூர் மாவட்ட அதிமுக ஒன்றிய, நகர, பேரூர், மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளுக்கான தேர்தல், ஏற்கனவே நடந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், அதிமுக அரியலூர் மாவட்ட செயலாளர் பதவிக்கு போட்டியிடுவோரிடம் இருந்து, விண்ணப்ப மனு பெறும் நிகழ்ச்சி, அரியலூர் ரிதன்யா மஹால் திருமண மண்டபத்தில், கடந்த 25ஆம் தேதி கட்சியின் மாநில நிர்வாகி வைகை செல்வன் தலைமையில் நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து அதிமுகவின் அரியலூர் மாவட்ட நிர்வாகிகள் தேர்வு பற்றிய விவரம் சென்னையில் உள்ள தலைமை கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அதிமுக அரியலூர் மாவட்ட செயலாளராக, தாமரை எஸ். ராஜேந்திரன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த 2016 முதல் 2021 வரை, அரியலூர் சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழக அரசின் தலைமை கொறடாவாகவும் செயல்பட்டார். முன்னதாக இவர், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல், தொடர்ந்து அதிமுகவில், அரியலூர் மாவட்ட செயலாளராக செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அதிமுக அரியலூர் மாவட்ட அவைத் தலைவராக, முன்னாள் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஜே .கே. என். ராம ஜெயலிங்கம், மாவட்ட இணைச் செயலாளராக கங்கைகொண்ட சோழபுரத்தை சேர்ந்த கண்ணகி குப்புசாமி, மாவட்ட துணைச் செயலாளராக சுத்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த ஆர். வாசுகி, தேவா மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த தங்க. பிச்சமுத்து, மாவட்ட பொருளாளராக எம். அன்பழகன், பொதுக்குழு உறுப்பினர்களாக, அரியலூர் சட்டமன்ற தொகுதியில் இருந்து வைப்பம் கோ.சிவபெருமாள், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து எஸ்.செல்லையா, ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதுபற்றிய அறிவிப்பு வெளியானதை தொடர்ந்து, அரியலூர் பேருந்து நிலையம் அருகே, அதிமுக நகர செயலாளர் ஏ.பி.செந்தில் தலைமையில், புரட்சிசிவா உட்பட கட்சி நிர்வாகிகள் பலரும், பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள்.



புதுக்கோட்டை எவர்கிரீன் அறக்கட்டளை சார்பாக ஆதரவற்றோர் மாற்றுத் திறனாளி மற்றும் ஜகாத் தகுதி உள்ளவர்களுக்கு ரமலான் ஜகாத் மற்றும் நோன்பு பித்ரா பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கலிப் நகர் ஜும்மா பள்ளிவாசல் தலைமை இமாம் மௌலவி சுல்தான் முனிரி தலைமை வகித்தார், எவர்கிரீன் டிரஸ்ட் பொருளாளர் குட்லக் பிளாஸ்டிக் முஹம்மது அப்துல்லா வரவேற்புரை ஆற்றினார், சிறப்பு அழைப்பாளர்கள் அகில இந்திய மஜ்லிஸ் கட்சி மாவட்ட தலைவர் முபாரக் ஜான் , முஹம்மது இப்ராஹிம், செய்தியாளர் முஹம்மது மீரான், எஸ் முகமது இலியாஸ்ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்வில் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் மதிப்புள்ள வேட்டி சேலைகள் மற்றும்அரிசி மளிகை பொருள்கள் 120 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது, இறுதியில் எவர்கிரீன் அறக்கட்டளை மேனேஜிங் டிரஸ்டி மௌலவி ஏ ஆர் சுல்தான் மன்பயி தேவ்பந்தி நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார், முஹம்மது இஸ்மாயில் நன்றி கூறினார்.

# உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையத்திற்கு ரூபாய் 2 கோடி மதிப்புள்ள மின்திறன் மாற்றி



கள்ளக்குறிச்சி ஏப்.28-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள தக்கா கிராமத்தில் 110/33 கி.வா துணை மின் நிலையம் அமைந்துள்ளது. இம்மின் நிலையத்தில் 33 கி.வா மின் பாதையில் இயங்கக்கூடிய 16 மெகாவாட் ஆம்ப் திறன் மின்மாற்றி இரண்டும், 11 கிலோ வாட் மின் பாதையில் இயங்கக்கூடிய 16 மெகாவாட் ஆம்ப் திறன் மின்மாற்றி ஒன்றும், இயங்கி உளுந்தூர்பேட்டை நகராட்சி மற்றும் சுமார் 30-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் பொதுமக்களின் மின் பயன்பாடு அதிகரித்து வந்த நிலையில், பொதுமக்களின் நலன் கருதி கடந்த 2018-ம் ஆண்டு மேலும் ஒரு 11 கிலோ வாட் மின் பாதையில் இயங்கக்கூடிய 16 மெகாவாட் ஆம்ப் புதிய திறன் மின்மாற்றி அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் தற்பொழுது கோடை காலத்தில் பொதுமக்களின் மின் பயன்பாடு அதிகரித்து வந்த நிலையில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினரின் முயற்சியால் ரூபாய் 1 கோடியே 95 லட்சத்து 22 ஆயிரத்து 25 ரூபாய் மதிப்புள்ள 16 மெகாவாட் ஆம்ப் புதிய திறன் மின்மாற்றி சென்னையில் இருந்து உளுந்தூர்பேட்டை துணைமின்நிலையத்திற்கு வந்துள்ளது. மேலும் மின்மாற்றி பொருத்தும் பணி விரைவில் நடைபெறும் என அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

# சென்னையில் கல்லூரி மாணவிகள் சாலையில் குடுமிபிடி சண்டை - எச்சரித்து அனுப்பிய போலீசார்



சென்னை ஏப்.28-

சென்னை புதுவண்ணாரப் பேட்டையில் கல்லூரி மாணவிகள் சாலையில் குடுமி சண்டையிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னை புதுவண்ணாரப் பேட்டையில் அமைந்துள்ள அரசு கலை அறிவியல் மற்றும் தொழிற்கல்வி கல்லூரியில் பயின்று வரும் மாணவிகள் சிலர், கல்லூரி முடிந்து பேருந்திற்காக காத்திருந்தனர். அப்போது இரு மாணவிகளுக்கிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அது முற்றி கைகலப்பாக மாறி குடுமி சண்டையில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அங்கிருந்த சக கல்லூரி மாணவ - மாணவிகள் இருவரையும் விலக்கி விட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் மாணவிகளுக்கு அறிவுரை கூறி எச்சரித்து அனுப்பி வைத்தனர். இதனால் புதுவண்ணாரப்பேட்டை பேருந்து நிறுத்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## உளுந்தூர்பேட்டையில் வட்டாரப் போக்குவரத்து சார்பில்

# சீட்பெல்ட் தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு




கள்ளக்குறிச்சி, ஏப்,28_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து துறையின் சார்பில் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடியில் இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் கார், லாரி மற்றும் பேருந்துகள் ஓட்டுநர்களிடம் தலைக்கவசம் மற்றும் சீட்பெல்ட் அணிவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் சீட் பெல்ட் மற்றும் தலைக்கவசம் அணிந்து சென்ற வாகன ஓட்டிகளுக்கு பேனா மற்றும் சாக்லேட் வழங்கி உற்சாகப்படுத்தினர்.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் கோட்டாட்சியர் யோகஜோதி, உளுந்தூர்பேட்டை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மகேஷ், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் கள்ளக்குறிச்சி ஜெயபாஸ்கரன், உளுந்தூர்பேட்டை செந்தூர்வேல், வட்டார போக்குவரத்து ஆய்வாளர்கள் செல்வம், பெரியசாமி, வட்டாட்சியர் கோபாலகிருஷ்ணன், காவல் நிலைய ஆய்வாளர் தமிழ்வாணன், சுங்கச்சாவடி மேலாளர்கள் ராம்கிஷோர், கருணாகரன், ராஜேந்திரபிரசாத், சிவசங்கரன், பாஸ்கர், ரகுநாத், சீனிவாசன், செந்தில், போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் கோவிந்தசாமி மற்றும் சுங்கச்சாவடி ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் பேருந்து படியில் பயணம் செய்த மாணவர்களுக்கு நூதன தண்டனை வழங்கிய போலீசார்



சென்னை ஏப்.28-

பேருந்து படியில் பயணம் செய்த மாணவர்களை கீழே இறக்கி தோப்புக்கரணம் போடச் சொல்லி போலீசார் நூதன தண்டனை வழங்கினர்.

ஆவடி சுற்றுவட்டாரப் பகுதியில் ஏராளமான தனியார் மற்றும் அரசுப் பள்ளிகள் உள்ளன. இங்கு பயிலும் மாணவர்கள் பள்ளிக்கு சென்று வரும்போது ஓடும் மாநகர பேருந்துகளில் அஜாக்கிரதையாக பயணம் செய்வது, சாகசங்களில் ஈடுபடுவது உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனைத் தட்டிக் கேட்கும் ஓட்டுநர்கள், நடத்துநர்களை மாணவர்கள் அவதூறாக பேசி வருவதாக கூறப்படுகிறது.

இது குறித்து சமீபத்தில் ஓட்டுனர் மற்றும் நடத்துனர்கள் காவல்துறை அதிகாரிகளிடம் புகார் செய்து வந்தனர். இந்நிலையில் ஆவடி குற்றப்பிரிவு ஆய்வாளர் அருணாச்சல ராஜா தலைமையில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது ஆவடியில் இருந்து கன்னியம்மன் நகர், கோவில்பதாகை, முத்தாபுதுப்பேட்டை ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் மாநகர பேருந்துகளில் மாணவர்கள் படிக்கட்டில் தொங்கியபடி பயணம் செய்தனர்.

இதனையடுத்து 20-க்கும் மேற்பட்ட மாணவர்களை பேருந்திலிருந்து இறக்கிய போலீசார் அவர்களை தோப்புக்கரணம் போடச் சொல்லி நூதன தண்டனை வழங்கினர். மேலும் போலீசார் அவர்களுக்கு அறிவுரைகளை கூறி எச்சரித்து வீட்டிற்கு அனுப்பினர். அலுவலக நேரங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளில் பேருந்து எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஊராட்சி பணியாளர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

கள்ளக்குறிச்சி ஏப்.28-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத்தில் உள்ள ஊராட்சி பணியாளர்கள் 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும்வகையில், மாவட்ட அளவிலான கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஊராட்சி பணியாளர்கள் மாநில துணைத் தலைவர் தங்கராஜ் தலைமை தாங்கினார், மாவட்ட செயலாளர் சங்கர் வரவேற்புரையாற்றினார், மண்டலத் தலைவர் பழனி சிறப்புரையாற்றினார், மாவட்டத் தலைவர் இராமலிங்கம் கோரிக்கைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றினார். ஊராட்சி பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் உடனடியாக வழங்க வேண்டும், ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை, தூய்மை காவலர்களுக்கு 10 ஆயிரம் ஊதியம், ஊராட்சி செயலாளர்களுக்கு அரசுக் கருவூலத்தின் வாயிலாக ஊதியம் மற்றும் அரசு சலுகைகளை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து ஊராட்சி இருபால் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டத்தில் 28-வது மெகா தடுப்பூசி முகாம் நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கார்மேகம் தலைமையில் நேற்று மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மேட்டூர் சார் ஆட்சியர் வீர் பிரதாப் சிங், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செல்வம், இணை இயக்குனர் (நலப்பணிகள்) நெடுமாறன், துணை இயக்குனர் (சுகாதாரப்பணிகள்) நளினி, ஜெமினி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அரசு உத்தரவின்படி பராமரிக்கப்படுவதை மாவட்ட கலெக்டர் கவிதா ராமு நேற்று நேரில் பார்வையிட்டார். அருகில் மருத்துவ கல்லூரி முதல்வர் பூவதி, வருவாய் கோட்டாட்சியர் அபிநயா உள்ளிட்டோர் உள்ளனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# அமைச்சரவை முடிவுக்கு கட்டுப்பட்டவர்தான் ஆளுநர்

# தஞ்சை கோவில் திருவிழாவில் 11 பேர் பரிதாப பலி





# சபாநாயகர் நடுநிலை இல்லாமல் செயல்படுகிறார்


| சென்னை / புதுக்கோட்டை | 28.04.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

28.04.2022 வியாழன்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**கியேடல்** , செக்-அமெரிக்கக் கணிதவியலாளர், மெய்யியலாளர் (பி, 1906) (இ. 1978)



**எம். பி. நாச்சிமுத்து** , சென்னிமலை, கைத்தறி நெசவுத் துறையில் சமூக சேவகர் (பி, 1913) (இ. 1987)



**இரா. செழியன்** , தமிழக அரசியல்வாதி, எழுத்தாளர் (பி, 1923)



**சமந்தா ருத் பிரபு** , இந்தியத் திரைப்பட நடிகை (பி, 1987)



## இன்றைய நினைவு நாள்

**பிட்டி தியாகராயர்** , திராவிட இயக்கத் தலைவர், நீதிக்கட்சியின் நிறுவனர் (பி, 1852) (இ. 1925)



**தி. வே. சுந்தரம்** , இந்தியத் தொழிலதிபர் (பி, 1877) (இ. 1955)



**சாலினி இளந்திரையன்** , தமிழக சொற்பொழிவாளர், எழுத்தாளர், இதழாளர் (பி, 1933) (இ. 2000)



## தொழிலாளர் நினைவு நாள்

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள்

# நியமிக்கப்படவுள்ளனர்

## கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

## மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

### விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்